> வேதச் செயல் மீது நம்பிக்கை வையுங்கள், நடப்பது நமது நன்மைக்கே.
>
> – புனித மேரி மெக்கிலொப்

அஞ்ச வேண்டாம் என இன்றைய நற்செய்தி கூறுகிறது. அஞ்ச வேண்டாம் என திருவிவிலியத்தில் 365 முறை கடவுள் கூறுகிறார். ஆயினும் நாம் துன்புறுத்தப்படுகிறோம், அஞ்சுகிறோம். கடவுளின் வார்த்தையை மீண்டும் நினைவுப்படுத்துவோம், அவர் நம்மை காக்கின்றார் என்பதை உண்மையிலேயே நம்புவோம். பகடி செய்வோர், புழுதி வாரி இறைப்போர், உடல் ரீதியிலும் மன ரீதியிலும் காயப்படுத்துவோர் கண்டு அஞ்ச வேண்டாம் என இயேசு ஆறுதல் அளிக்கிறார். அவர்கள் நமது ஆன்மாவை ஒன்றும் செய்ய இயலாது.

அவனின்றி அணுவும் அசையாது. அவருக்குத் தெரியாமல் எதுவும் நடக்காது. நமது தலையின் முடியும் எண்ணப்பட்டுள்ளது (லூாக்கா 12:7). பறக்கும் பறவைகள் மீது பரிவு காட்டும் கடவுள், அவரது அன்பு மக்களாகிய நம் மீது கரிசனை காட்டாமல் போவாரா? இயேசு வழியாக மீட்பு பெற்று, விண்ணக நிலைவாழ்வடைய நமக்காக அவர் சிலுவையில் மரித்தார். அவரது தியாகத்திற்கு நாம் தகுதியற்றவர்கள். இருப்பினும் இந்த கடவுளின் கொடை நமக்கு இலவசமாக கொடுக்கப்பட்டுள்ளது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் அவரை நம்ப வேண்டும். நாம் அவரது சீடர்கள் என்பதை அச்சமின்றி கூச்சமின்றி அறிவிப்போம்.

மலைப்பொழிவில் இயேசு வழங்கிய அருளை நினைவுப்படுத்துவோம்:

> "ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்,ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது,
>
> துயருறுவோர் பேறுபெற்றோர்,ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்.
>
> கனிவுடையோர் பேறுபெற்றோர்,ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்.
>
> நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்,
>
> இரக்கமுடையோர் பேறுபெற்றோர்,ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்,
>
> தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.
>
> அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்,ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்.
>
> நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது." (மத்.5:3-10)

ஆகவே, அஞ்ச வேண்டாம். ✝

**இன்றைய வாசகங்கள்:**

எரே. 20, 10-13.

திபா. 68, 8-10. 14. 17. 33-35.

உரோ. 5, 12-15.

மத். 10, 26-33.

**வாரம் ஒரு வசனம்**

நாம் செய்ய வேண்டியதெல்லாம், அவரை நம்ப வேண்டும்

INTERNAL CIRCULATION ONLY
BUL 25/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

21 ஜூன் 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 12ம் ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்



மாதாந்திர கருப்பொருள்:

ஒரு வார்த்தை சொல்லும் நான் குணம் பெறுவேன்

# நாம் ஏன் அஞ்ச வேண்டும்?

இந்த வாழ்வில் நாம் பலவிதமான துன்புறுத்தலை அல்லது சித்ரவதையை நாம் எதிர்நோக்குகிறோம். பள்ளியிலும் சரி அலுவலகத்திலும் சரி ஏன் இக்காலத்தில் புலனத்திலும் சரி இம்மாதிரியான இம்சைகளை சந்திக்கிறோம். இந்த சூழ்நிலையைச் சமாளிப்பது எப்படி? இதற்கான வழியைத் தேடி முடிவு செய்வதிலும் நமக்கு குழப்பம் ஏற்படுகிறது. கிறிஸ்துவர்கள் என்ற முறையில் இதனை எதிர்த்துப் போராடுகிறோமா அல்லது புறக்கணித்து விடுகிறோமா? இதனை எவ்வாறு தவிர்ப்பது? கடவுளிடம் இறைவேண்டல் செய்வோம்.



**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்

*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
**மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்**
*2020 ஜுன் (ஆனி) மாதத்தின் கருப்பொருள்:*
**ஒரு வார்த்தை சொல்லும் நான் குணம் பெறுவேன்**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** பொதுக்காலம் 12ஆம் ஞாயிறு 20 – 21 ஜுன் 2020
எரே 20 :10-13 தி.பா: 69: 7-9, 13, 16, 32-34 உரோ 5: 12-15 மத்தேயு 10: 26-33
**"கடவுளே உமது பேரன்பினால் எனக்குப் பதில்மொழி தாரும்" ! " தி.பா : 69**

மினவுதல் மாதா தேவாலயத்தில் ஜூன் 28 ,2020(ஞாயிறு காலை 9.00 மணி) திருப்பலி குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின்படி கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதிச க்கள் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மலேசிய அடையாள அட்டை வைத்திருக்கும் மலேசிய மக்கள் 380 பேர் மட்டுமே (வெளி நாட்டினர், நிரந்தர குடியுரிமை கொண்டோர் இதில் கலந்துகொள்ள முடியாது) 12 வயதுக்கும் குறைவான சிறார்கள் கலந்துகொள்ள அனுமதியில்லை.

1) 28-06-20(ஞாயிறு) காலை 9.00 (ஆங்கி) சோன் 2- புனித ஜேம்ஸ், சோன் -4 புனித சைமன் & சோன் 5 - புனித பவுல்
2) 5-07-20 (ஞாயிறு) காலை 9.00 (தமிழ்) விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்
3) 12-07-20(ஞாயிறு) காலை 8.00 (தேமொழி) காலை: 11.00 (சீனம்) விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்
4) 19-07-20(ஞாயிறு) காலை 8.00 (தமிழ்) காலை 11.00 (ஆங்கிலம்) - விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்
5) 26-07-20(ஞாயிறு) காலை 8.00 (தமிழ்) காலை 11.00 (ஆங்கிலம்) - விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்

**நிலையான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் (SOP)**

அ) திருப்பலியில் பங்கெடுக்க வருபவர்கள் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
ஆ) திருப்பலிக்கு வருபவர்கள் தங்களுடைய அடையாள அட்டையை உடன் கொண்டுவர வேண்டும்.
இ) கொடுக்கப்பட்டுள்ள வரைமுறைகளில் நீங்கள் இடம்பெற்றிருந்தாலும், உங்களுக்கு சளி , காய்ச்சல், இருமல், மூச்சு தொடர்பான பிரச்னைகள் இருந்தால் திருப்பலியில் பங்கெடுக்க வர வேண்டாம்.
ஈ) முக கவசம் அணிதல்/ பெயர் பதிவு/ வெப்ப நிலை சோதித்தல் / சுத்திகரிப்பு தெளிப்பானைக் கைகளில் பூசிக்கொள்ளுதல் ஆகியவை ஆலயத்திற்கு உள்ளே வரும்போதும், வெளியே செலும்வோதும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியவை.
உ) திருப்பலியில் பங்கெடுக்க வரும் ஒவ்வொருவருக்கும் எண் எழுதப்பட்ட ஒரு அட்டை தரப்படும். திருப்பலிக்குப் பின் அதை அதற்குரிய இடத்தில் மீண்டும் ஒப்படைக்க வேண்டும்.
ஊ) தற்போது ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.
எ) இருக்கைகளில் குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே அமர வேண்டும்.
ஏ)தொடுதல்/ அணைத்தல்/கைகுலுக்குதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளது. நற்கருணை கைகளில் மட்டுமே வழங்கப்படும்.
உ) கழிவறைகளைப் பயன்படுத்தும்போது தூய்மையைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் அவசியம்.
ஊ) திருப்பலிக்குப் பின் உடனடியாக ஆலயவளாகத்தை விட்டு செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பங்கு அலுவலகம் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 - 5.30 வரை மற்றும் சனிக்கிழமை 8.30 - பகல் 1.30 வரை திறந்திருக்கும்

புதிய கிறிஸ்துவ புகுமுக வகுப்புகள் 2020/2021 விரைவில் தொடங்க விருக்கின்றன. ஆர்வ முள்ளோர் தொடர்புகொள்ள: லியோ - 013 -3977639அல்லது பங்கு அலுவலகத்தை தொடர்புகொள்ளவும். 06-7624468/06-7677542)

ஆலயத்தின் மறு சுழற்சி திட்டம் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, தயவு செய்து கார் நிறுத்தும் இடத்தில் உங்களுடைய பொருட்களை வந்து போடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

***மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்***

1) கொர்னேலியுஸ் தே எங் கியோங் - இறப்பு: 15-6-20
2) செபஸ்டியன் நாதன் த/பெ டேவிட் நாதன் -19-6-20

***முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக***

**இறைவனின் அருளைச் சார்ந்திருங்கள்**

கிறிஸ்துவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!, உண்மையான கிறிஸ்துவன் கிறிஸ்துவின் குரலைக் கேட்டபின் உலக வாழ்க்கையிலிருந்து வேறுபட்டவனாகத் தான் இருப்பன். உலகின் நிலைப்பாடுகளில் வேரூன்றாமல் அந்த நிலைப்பாடுகளில் இருந்து உருமாற்றம் பெற்றவனாக இருப்பான். கொவிட் 19 பேரிடரின் பொருட்டு நாம் மீண்டும் இயல்பு நிலைக்கு மாறும்போது, பழைய வாழ்க்கை முறைகள் மீண்டும் நமக்கு சோதனைகளைத் தரும். இருந்தபோதும், பழைய வாழ்க்கைக்கு நாம் மீண்டும் செல்லாமல் இருக்க இறைவனின் அருள் நமக்கு நிச்சயம் தேவை. எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்:
2 கொரி: 12:9 ***ஆனால். அவர் என்னிடம் "என் அருள் உனக்குப் போதும்; வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்" என்றார்.***

*"உங்களுக்கு எங்களுடைய ஆசீரும் அமைதியும் உரித்தாகுக! அருட்பணி சேவி & கென்னத்*

நடமாட்டக் கட்டுப்பாட்டு நேரத்தில் (2020 மார்ச் 18 - 21 ஜுன்) வரை பெறப்பட்ட காணிக்கைகள்:

| பங்கு காணிக்கை | பங்கு காணிக்கை | தியான இல்லம் | பமமேகு உணவு வங்கி |
|---|---|---|---|
| மொத்த தொகை: | **RM 29,658.00** | **RM 13,338.00** | **RM 3955.00** |

***உங்களின் அனைத்து வகையான பங்களிப்புகளுக்கும் மிக்க நன்றி.***
***இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!***

**நன்கொடை / காணிக்கைகள்**
**கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:**

(1) பங்கின் நிதி (2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு (4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் :**

| | |
|---|---|
| 1.வங்கியின் பெயர்: | **Public Bank Berhad** |
| 2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: | **Church of Visitation** |
| 3.வங்கிக் கணக்கு எண்: | **3121194612** |

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**

**(i) தொகை (ii) என்ன காராணம்:**
**(1) பங்கின் நிதி காணிக்கை**
**(2) திருப்பலி கருத்துகள் (பெயர்) - ஆன்ம இளைப்பாற்றி, நன்றி, அல்லது தனிப்பட்ட கருத்துகள்**
**(3) ஆராதனை அறை சீரமைப்பு**
**(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு: ஜோன் டேவிட்சன் (017-615 8961) அல்லது பெர்னதெத் (012- 2715840)**

**பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.** serembanvisitation@gmail.com



**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்

*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்***
*2020 ஜுன் (ஆனி) மாதத்தின் கருப்பொருள்:*
***ஒரு வார்த்தை சொல்லும் நான் குணம் பெறுவேன்***

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



மினவுதல் மாதா தேவாலயத்தில் ஜூன் 28 ,2020(ஞாயிறு காலை 9.00 மணி) திருப்பலி குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின்படி கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதிச க்கள் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மலேசிய அடையாள அட்டை வைத்திருக்கும் மலேசிய மக்கள் 380 பேர் மட்டுமே (வெளி நாட்டினர், நிரந்தர குடியுரிமை கொண்டோர் இதில் கலந்துகொள்ள முடியாது) 12 வயதுக்கும் குறைவான சிறார்கள் கலந்துகொள்ள அனுமதியில்லை.

**குறிப்பிட்ட ஞாயிறு திருப்பலிகளில் அதற்கென வரையறுக்கப்பட்ட அதிச க்கள் மட்டுமே திருப்பலியில் பங்கெடுக்க அனுமதிக்கப்படுவர். இந்த விவரங்களை அறிந்துகொள்ள உங்கள் அதிச மற்றும் சோன் பொறுப்பாளர்களை தொடர்புகொள்ளுங்கள்.**
திருப்பலியில் பங்கெடுப்போரின் பெயர்கள் அதிச பொறுப்பாளர்களால் அந்தந்த ஞாயிறுக்குமுன் வரும் வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த அதிச க்களில் உள்ளவர்களின் பெயர்கள் மட்டுமே அதில் குறிப்பிடப் படவேண்டும். பெயர்ப்பட்டியலில் இல்லாத நபர்கள் திருப்பலியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஆலயத்தின் இந்த நடைமுறைகள் மத்திய மற்றும் மாநில அரசுகள் கொடுக்கப்பட்ட வழிமுறைகளின்படி பின்பற்றப்படுகிறது.

1) 28-06-20(ஞாயிறு) காலை 9.00 (ஆங்கி) சோன் 2- புனித ஜேம்ஸ், சோன் -4 புனித சைமன் & சோன் 5 - புனித பவுல்
2) 5-07-20 (ஞாயிறு) காலை 9.00 (தமிழ்) சோன் 1-7 & 9 இவற்றில் அடங்கியுள்ள அதிச க்கள் மட்டுமே. (அதிசக்களின் விவரம்: புனித அந்தோணி/புனித பேட்ரிக்/ புனித ரேய்மண்ட்/புனித சக்கேயுஸ்/புனித ஹிலாரி/-1/புனித மரியா/புனித கெட்ரூட்/புனித டெனிஸ்/புனித அலோசியஸ்/புனித பவுல்/புனித ரோபர்ட்/புனித ஸ்டீபன்/புனித தீமோத்தி/புனித சிசிலியா/புனித ரஃபேல்/புனித டேவிட்/புனித ஜோன்வியான்னி

3) 12-07-20(ஞாயிறு) காலை 8.00 (தேமொழி) காலை: 11.00 (சீனம்) விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்
4) 19-07-20(ஞாயிறு) காலை 8.00 (தமிழ்) காலை 11.00 (ஆங்கிலம்) - விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்
5) 26-07-20(ஞாயிறு) காலை 8.00 (தமிழ்) காலை 11.00 (ஆங்கிலம்) - விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்

<u>நிலையான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் (SOP)</u>

அ) திருப்பலியில் பங்கெடுக்க வருபவர்கள் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
ஆ) திருப்பலிக்கு வருபவர்கள் தங்களுடைய அடையாள அட்டையை உடன் கொண்டுவர வேண்டும்.
இ) கொடுக்கப்பட்டுள்ள வரைமுறைகளில் நீங்கள் இடம்பெற்றிருந்தாலும், உங்களுக்கு சளி , காய்ச்சல், இருமல், மூச்சு தொடர்பான பிரச்னைகள் இருந்தால் திருப்பலியில் பங்கெடுக்க வர வேண்டாம்.
ஈ) முக கவசம் அணிதல்/ பெயர் பதிவு/ வெப்ப நிலை சோதித்தல் / சுத்திகரிப்பு தெளிப்பானைக் கைகளில் பூசிக்கொள்ளுதல் ஆகியவை ஆலயத்திற்கு உள்ளே வரும்போதும், வெளியே செலும்வோதும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியவை.
உ) திருப்பலியில் பங்கெடுக்க வரும் ஒவ்வொருவருக்கும் எண் எழுதப்பட்ட ஒரு அட்டை தரப்படும். திருப்பலிக்குப் பின் அதை அதற்குரிய இடத்தில் மீண்டும் ஒப்படைக்க வேண்டும்.
ஊ) தற்போது ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.
எ) இருக்கைகளில் குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே அமர வேண்டும்.
ஏ)தொடுதல்/ அணைத்தல்/கைகுலுக்குதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளது. நற்கருணை கைகளில் மட்டுமே வழங்கப்படும்.
உ) கழிவறைகளைப் பயன்படுத்தும்போது தூய்மையைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். ஒரே நேரத்தில் அதிகமான நபர்கள் இருப்பது கூடாது. சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் அவசியம்.
ஊ) திருப்பலிக்குப் பின் உடனடியாக ஆலய வளாகத்தை விட்டு செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம்.